வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

EA.No. 4 / 2022

in

E.P.No.12/2022

வழக்கு சாட்சி RW 1

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுப்பிரமணி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் | : | வரதராஜன் | கணவர் பெயர் | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |
| மாவட்டம் | : | | நாள் | : | 16.04.2024 |

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் எதிர்மனுதாரர் ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 03.09.2004 | 2-ம் மனுதாரரால் அச்சமநாயக்கர் மகன் சுப்பிரமணிக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் |

மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று இடை மனு எண்.12/2022 எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. அந்த மனுவை அதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை எனக்கு ஒப்படைப்பு செய்து உத்தரவிட பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இன்று வரையில் மனு சொத்து என்னிடம் ஒப்படைப்பு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த மனுதாரர் குருவம்மாள் மனு சொத்தை ஒப்படைப்பு செய்ய கூடாது என்றும் அந்த சொத்தின் மீது நான் தீர்ப்பாணை பெற்றுள்ளதாக தடையாணை மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1 கிரைய ஆவணம் 2-ம் பிரதிவாதி வரதராஜன் 1ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்ட அச்சமநாயக்கர் மகன் சுப்பிரமணிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். குருவம்மாள், வரதராஜன் மற்றும் அச்சமநாயக்கர் மகன் சுப்பிரமணி ஆகியோர்கள் கூட்டு சேர்ந்து கொண்டு நான் அனுபவத்து வரும் சொத்தை இடையூறு செய்து வருகிறார்கள். ஒப்படைப்பு கோரியுள்ள சொத்தின் ஒரு பகுதியை லெட்சுமி என்பவருக்கு நான் கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால்

சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் தான் நான் கிரையம் செய்து கொடுத்த கிரைய ஆவணம். **அது ம.சா.ஆ.3.** சொத்தின் ஒரு பகுதியை நான் 3வது நபருக்கு நான் கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் சொத்தின் ஒப்படைப்பு பரிகாரம் கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. அசல் மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்து விபரமும் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒப்படைப்புக்காக இங்கு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் நேற்று ஜேசிபி மற்றும் டிராக்டரை வைத்து அதில் உள்ள மரம், செடிகொடிகளை அழித்து பாதை அமைப்பதற்கு எத்தனைத்தேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1ல் கண்ட சொத்தும் நான் ஏற்கனவே தீர்ப்பில் கட்டுப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் குருவம்மாள் பெற்ற தீர்ப்பாணையிலும் எ.ம.சா.ஆ.1ல் கண்ட சொத்தும் கட்டுப்பட்டுள்ளது என்றால் தவறு. அதனால் நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று இடை மனு எண்.12/2022யை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் இந்த மனுதாரர் தாக்கல் செய்துள்ள இடை மனு எண்.4/2022 யை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என்று சொன்னால் சரிதான். (சாட்சி தற்போது மாற்றி சரியல்ல என்று சாட்சியம் அளிக்கிறார்.)

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.04.16 18:35:29 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்